09.01.2019.அ.வ.எண்.387/2012

வா.சா.1, வசந்தா

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கின் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். என்னுடைய நிருபண பிரமாண பத்திரிகையில் உள்ள விவரங்களும் எனக்கு தெரியும். இவ்வழக்கின் பிரதிவாதிக்கு எதிராக நானும் கலா என்பவரும் அ.வ.எண்.386/2012 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரதிவாதி எந்த தொந்தரவும் செய்யக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதி எனக்கு எதிராக அ.வ.எண்.395/2012 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும். தாவா சொத்தின் புல எண்கள் 463/1 மற்றும் 7 ஆகிய இரண்டு உட்பிரிவுகளில் அடங்கியதாகும். பிரதிவாதி உரிமை கோருகின்ற இடத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியும் அது புல எண்.463/8 ஆகும். இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமிக்க கோரி பிரதிவாதி மனுதாக்கல் செய்து அதன் அடிப்படையில் நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்பட்டார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பிரதிவாதியின் இடத்தை அளந்து பார்த்தார் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு மறுப்பு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் உரிமைகோருகின்ற இடம் புல எண்.463/8எ-வில் தான் அமைந்துள்ளது என்றும் அது பிரதிவாதிக்கு சொந்தமான இடம் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாணையின் தொடர்ச்சிக்காக வேண்டி பிரதிவாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது)